தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 80/பேரூ/2023
நாள் 03.05.2023

திரு.S.ரவிகுமார்,
பரிசவிளை,
கன்னியாகுமரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
முளகுமூடு முதல்நிலை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம். – எதிர் மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், முளகுமூடு அஞ்சல், கூட்டமாவு, பரிசவிளை என்ற முகவரியில் வசிக்கும் திரு.S.ரவிகுமார் என்பவரின் 27.03.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.03.2023 அன்று பெறப்பட்டு 80/பேரூ/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், முளகுமூடு அஞ்சல், கூட்டமாவு, பரிசவிளை என்ற முகவரியில் வசிக்கும் திரு.S.ரவிகுமார் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"நான் முளகுமூடு பேரூராட்சியில் 5வது வார்டில் 2வது முறையாக வார்டு உறுப்பினராயிருந்து மக்கள் பணி ஆற்றி வருகிறேன். முளகுமூடு பேரூராட்சியில் கலைஞர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (2022 – 23) குளம் புனரமைப்பு செய்வதற்கு ஆரோட்டுக் குளம் (சர்வே எண்.42/6) தேர்வு செய்யப்பட்டு 19.07.2022 அன்று டெண்டர் விடப்பட்டு அந்த பணி நடைபெற்று வருகிறது. அதில் பக்க சுவரும் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. ஆனால் முடிந்த வேலைக்கு மீண்டும் 10,00,000/– ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டு 29.03.2023 அன்று டெண்டர் கோரப்பட்டுள்ளது. எனவே ஊழல் செய்து முறைகேடாக டெண்டர் கோரிய டெண்டரை ரத்து செய்து ஆணையிடவேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 10.04.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் முளகுமூடு முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

முளகுமூடு முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 19.04.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:–

"கன்னியாகுமரி மாவட்டம், முளகுமூடு முதல்நிலை பேரூராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022 – 23–ன்கீழ் முளகுமூடு பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8, புல எண்.42/6–ல் ஆரோட்டுகுளம் புனரமைக்க ரூ.29.75/– இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி கிடைக்கப்பெற்றது. ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு, வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மேலும் ஆரோட்டு குளத்தில் நாளது தேதி வரை பணி முழுமையாக முடிவடையவில்லை. இவ்வேலைக்கு ஒப்பந்ததாரருக்கு தொகை ஏதும் வழங்கப்படவில்லை.

புகாரில் குறிப்பிட்டுள்ள வேலை, பொதுநிதி 2022–23–ன்கீழ் ஆரோட்டுக் குளத்தில் பக்கச்சுவர் மற்றும் உடைந்துள்ள மடை பகுதியை சீர் செய்தல் வேலைக்கு மன்ற தீர்மானத்தின்படி வேலை தேர்வு செய்யப்பட்டு, ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்ற அங்கீகாரம் பெறப்பட்டு, 10.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பேரூராட்சி மன்றத் தலைவர் முன்அனுமதியின் பேரில் வேலை உத்தரவு வழங்கப்பட்டு தற்போது மண் தோண்டும் பணி மட்டுமே நடைபெற்று வருகிறது. நாளது வரை வேறுபணிகள் ஏதும் நடைபெறவில்லை. புகாரில் தெரிவித்துள்ளவாறு செய்து முடிக்கப்பட்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் கோரப்படவில்லை. இப்புகார் உண்மையில்லை. மேலும் புகார் தெரிவித்துள்ள 5வது வார்டு உறுப்பினர் மேற்படி பணிக்கான வேலை தேர்வு செய்த போதும் கூட்டத்தில் கலந்து கொண்டு மேற்படி பொருள் தொடர்பாக எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது தற்போது புகார் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி 2 பணிகளுக்கான தனித்தனியான புகைப்படங்கள் இத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான முளகுமூடு பேரூராட்சி செயல் அலுவலரும், 19.04.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.04.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.S.ரவிகுமார் என்பவர் 19.04.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"கன்னியாகுமரி, முளகுமூடு பேரூராட்சியின் 5வது வார்டு உறுப்பினராக உள்ளேன். முளகுமூடு பேரூராட்சியில் கலைஞர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (2022–2023) ஆரோட்டுக்குளம் (சர்வே எண்.42/6) புனரமைப்பு செய்வதற்கு 19.07.2022 அன்று டெண்டர் விடப்பட்டு ரூபாய் 29.75 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் மேற்கண்ட

ஒப்பந்தத் தொகையிலேயே அங்கு பக்கச் சுவரும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. ஆனால் முடிக்கப்பட்ட பணிக்கு மீண்டும் ரூ.10/– இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டு 29.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளும்போது மன்றத் தீர்மானம் ஏதும் நிறைவேற்றாமலும், வார்டு உறுப்பினர் என்ற முறையில் எனது கையொப்பம் ஏதும் பெறாமலும் மேற்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. முடிந்த வேலைக்கு ஒப்பந்தப் புள்ளி கோரும் பேரூராட்சியினரால், முளகுமூடு பேரூராட்சிக்கு பெருத்த நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, முறைகேடாக பெறப்பட்ட மேற்கண்ட 10/– இலட்சம் ரூபாய்க்கான ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தினை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரான முளகுமூடு பேரூராட்சி செயல் அலுவலர் திரு.தா.கிறிஸ்துதாஸ் என்பவர் 19.04.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

''மனுதாரர் குறிப்பிட்டுள்ள முளகுமூடு பேரூராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022–2023ன் கீழ் ஆரோட்டுக் குளம் புனரமைக்க 29.75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டன. மேற்கண்ட பணிக்கான ஒப்பந்தத் தொகை ஒப்பந்ததாரருக்கு முழுமையாக வழங்கப்படவில்லை. மேலும், மேற்கண்ட ஆரோட்டுக் குளத்தை சுற்றியுள்ள பக்கவாட்டு சுவர் இடிந்த நிலையில் இருந்ததால், அதனையும் சீரமைக்கும் பணி பேரூராட்சியின் பொது நிதியிலிருந்த 10/– இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டது. மனுதாரர் தெரிவித்துள்ளவாறு மேற்கண்ட இரண்டு பணிகள் வெவ்வேறு நிதியின் கீழ் செய்யப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளும்போது மனுதாரர் வார்டு உறுப்பினர் என்கின்ற முறையில் தனது கையொப்பத்தையும் இட்டுள்ளார் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட இரண்டு பணிகளுக்கான மன்றத் தீர்மான புத்தகங்களை ( Minutes Book) இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 19.4.2023 நாளிட்ட கடிதத்தின் நகலினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், முளகுமூடு பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம், பரிசவிளையைச் சேர்ந்த முளகுமூடு பேரூராட்சியின் மன்ற உறுப்பினரும் மற்றும் மனுதாரருமான திரு.S.ரவிக்குமார் என்பவர் தனது 27.03.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் முளகுமூடு பேரூராட்சிக்குட்பட்ட ஆரோட்டுக்குளத்தினை சீரமைக்க 19.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி மூலம் பணி நடைபெற்று வரும் சமயத்தில், ஆரோட்டுக்குளத்தின் பக்க சுவற்றினை கட்ட மீண்டும் 29.03.2023 அன்று ரூ 10/– இலட்சம்

மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதன் மூலம் ஏற்கனவே செய்த வேலைக்கு மீண்டும் முறைகேடாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதாக புகார் தெரிவித்துள்ளார்.

2022–23 ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டம், முளகுமூடு முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண்.42/6, வார்டு எண்.8–ல் அமைந்துள்ள ஆரோட்டுக்குளத்தினை ரூ.29.75/– இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்க அரசாணை (நிலை) எண்.88, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்.17.06.2022–ல் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

இவ்வாணையினை செயல்படுத்தும் வகையில் ஆரோட்டுக்குளத்தில் நீர்நிலைகளை புனரமைக்கும் பணிக்காக முளகுமூடு பேரூராட்சியால் 29.06.2022 நாளிட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலையினை சமர்ப்பித்த ஒப்பந்ததாரருக்கு 29.07.2022 நாளிட்ட பேரூராட்சி செயல் அலுவலரின் பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவது பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

இதற்கிடையில் முளகுமூடு பேரூராட்சியில் ஊர்மக்கள் மற்றும் பேரூராட்சி 8வது வார்டு உறுப்பினர் 15.12.2022 அன்று அளித்த கோரிக்கை மனுவில் ஆரோட்டுக்குளம் சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகையில், இக்குளத்தின் தென்மேற்கு பகுதியிலுள்ள மடையும், அதனையொட்டியுள்ள பகுதிகளிலிருந்தும் பெருமளவு நீர்கசிந்து வருவதால், குளத்தின் நீரை சேகரிக்கும் வகையில் மடையையும் மற்றும் அதனை சார்ந்த பகுதியையும் சுற்றி சுவர் எழுப்பக் கோரியதன் அடிப்படையில், ஆரோட்டுக்குளத்தில் பக்கச் சுவர் மற்றும் உடைந்து கிடக்கும் மடைபகுதியை சீர்செய்வதற்கு பேரூராட்சியால் 23.12.2022 அன்று (தீர்மான எண்.218/2022) தீர்மானிக்கப்பட்டு, 07.02.2023 அன்று பேரூராட்சியின் 2022–23 ஆம் ஆண்டு பொது நிதியின்கீழ் ரூ 10/– இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள பேரூராட்சியால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. (தீர்மான எண்.29/2023) நாகர்கோவில் மண்டல பேரூராட்சி உதவி இயக்குநரின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது.

மேற்காணும், குளத்தின் பக்கச் சுவர் மற்றும் மடைபகுதியை சீர்செய்யும் பணிக்கு பேரூராட்சியால் 10.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை கோரிய ஒப்பந்ததாரருக்கு 29.03.2023 அன்று பணி ஆணையும் வழங்கப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

எனவே, 2022 – 23 ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஆரோட்டுக்குளத்தினை ரூ 26,86,346/– மதிப்பீட்டில் புனரமைப்பு செய்யும் பணியும் மற்றும் அதனைத் தொடர்ந்து 2022 – 23 ஆம் ஆண்டு பொது நிதியின்கீழ் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஆரோட்டுக்குளத்தில் பக்கச்சுவர் மற்றும் உடைந்துள்ள மடைப்பகுதியை ரூ 10/– இலட்சம் மதிப்பீட்டில் சீர் செய்யும் பணியும் வெவ்வெறு பணிகள் என்பதையும், இவ்விரு பணிகளுக்கும் பேரூராட்சி மன்ற உறுப்பினரும் மற்றும் மனுதாரரும் பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றும் போது எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. மனுதாரர் புகாராக தெரிவிப்பது போல் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏற்கனவே முடிக்கப்பட்ட பணிக்கு மீண்டும் ரூ 10/– இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டதற்கு எவ்வித ஆதார ஆவணங்கள்

மனுதாரால் சமர்ப்பிக்கப்படாத நிலையில், முளகுமூடு முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையினை ஏற்று, இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

The Director of Local Fund Audit is directed to check up whether the work relating to the estimate of Rs 10 lakhs on improvements to the Arottukulam water body has been completed satisfactorily apart from the earlier estimated work at a cost of Rs 26.86 lakhs under the Kalaignar Nagarpura Mempattu Thittam by a special team. The team should inspect the work physically and verify the Tender records before submitting its report to Director of Local Fund Audit. The Director of Local Fund Audit shall send his report to this Forum within 45 days.

2023 ஆம் ஆண்டு மே திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.S.ரவிகுமார்,
பரிசவிளை, கூட்டமாவு,
முளகுமூடு அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம் – 629 167.

2) செயல் அலுவலர்,
முளகுமூடு முதல்நிலை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

4) இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

உதவிப்பதிவாளர்

05/05/23